
கவிதைத் தொகுப்பு

# யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை யாருக்குச் சொந்தம்?

எஸ்.பெருமான்



M29-3

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

# யாருக்குச் சொந்தம்
# இந்தக் குழந்தை
# யாருக்குச் சொந்தம்?

கவிதைத் தொகுப்பு

- எஸ்.பெருமாள்-

# காணிக்கை

உடல் தந்து உயிர் தந்து - பேசும்
குரல் தந்து சிந்திக்கும்
ஆற்றல் தந்து முன்னோர்கள்
வழிவந்த கோல் தந்து - உயிருக்கு
உயிராம் தமிழ் தந்து - தரணிதனில்
யான் வாழும் மார்க்கமெல்லாம்
வகுத்துத் தந்து வழிநடத்தும்
பெருங்கோவே வானுறையும்
பெருமானே நும்தம்
கழலடிக்கு இந்நூலை
காணிக்கை யாக்குகின்றேன்
காப்பும் நீயே!

கோல் : எழுதுகோல் : கல்வி

**நூல் : யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை யாருக்குச் சொந்தம்?**
Book : Yarukku Sontham Intha Kulanthai Yarukku Sontham?
(கவிதைத் தொகுப்பு : Collection of Poems)
ஆசிரியர் : எஸ்.பெருமாள் (முன்னாள் ஆசிரியர்- ஈழநாடு பத்திரிகை)
S.Perumal (Ex.Editor Eelanadu Newspaper)
முகவரி : 13A /3, புரூடி ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம்
Address : 13A /3, Broodie Lane, Ariyalai, Jaffna
பதிப்புரிமை : © ஆசிரியருக்கே
All rights reserved
முதற்பதிப்பு : 2017 மார்கழி
1st Edition : December 2017
Pages : i-xii + 46
வடிவமைப்பு : மறுயுகம். யாழ்ப்பாணம். maruyuham@gmail.com
பதிப்பகம் : ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ். பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்
விலை : **250/-**

## பொருளடக்கம்


அணிந்துரை

ஆசிரியர் உரை

**தேசவியல்**

புதுமை பொங்கும் காலம் மலர்கவே

சாபம் தானோ?

மலையகத்தில் ஒரு மாலைப்பொழுதில்

புனிதக் கோயிலாகட்டும் கல்வி நிலையங்கள் மீண்டும்

அவச் சொல்லை நீக்கிவிடுவோம்

**பொது இயல்**

யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை யாருக்குச் சொந்தம்?

மலர் ஒன்றை பறித்தேன்

மண்ணைக் குடைவோம் வாருங்கள்

அவர் நிகர்த்ததே தெய்வம்

பெண்ணை இழிவாகப் பேசாதே!

அதிகாலையில் ஒலிக்கும் அந்த மாயக்குரல்

"க" வரிசையில் சில கருத்துரைகள்

நீதி செத்துப்போகுமோ?

குடியின் மூலம் கிடைத்த வெகுமதி

**சிறுவர் இயல்**

அலறுவதால் ஆக்கமில்லை

மண்புழுவின் மாண்மியம்

கரடி புதிர்

இணையில்லை அன்பர்காள்

அழுகையை நிறுத்து

அனைத்தும் எங்கள் பறவைகள்

**தமிழ் இயல்**

மிதிபடியில் ஒன்றாக..

அன்னையை வணங்கினால்

உவகையோ உனக்குத் தாயே!

**இறை இயல்**

எங்குற்றனை இறைவா!

போற்றிடுவாய் மனமே தினம் தினம் வணங்கி போற்றிடுவாய்

வேதனை தீர்வதற்கோர் வழி காண்கிலையோ!

யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை?

சும்மாவும் நகைக்காரோ?

இறைவன் எப்போதும் இருப்பார்

# அணிந்துரை

திரு.எஸ்.பெருமாள் ஈழத்து வாசகர்களிடையே பத்திரிகாசிரியராக அறியப்பட்டவர். வீரகேசரி, ஈழநாடு, உதயன் பத்திரிகைகளில் பணியாற்றிய அநுபவசாலி.

அவ்வப்போது தாம் எழுதிய கவிதைகளைச் சேகரித்து 2016இல் "நடந்தபடி தேடுவோம்" என்ற தொகுதியாக வெளியிட்டிருந்தார். இப்பொழுது "யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை யாருக்குச் சொந்தம்?" என்ற கவிஞரின் இரண்டாவது கவிதைத் தொகுதி வெளிவருகிறது.

இத்தொகுதிகள் கவிஞர் ஓய்வு பெற்ற பின் வெளிவருவது கவனிக்கத்தக்கது. இந்நாளில், ஆரம்பக் கவிஞர்கள் இளவயதிலேயே தம் படைப்புக்களுக்கு நூலுருவம் தந்துவிடுகிறார்கள். "திருஞானசம்பந்தர் மூன்று வயதில் தேவாரம் பாடியிருக்க, நான் ஏன் முப்பது வயதில் நூல் வெளியிடக்கூடாது?" என்ற வாதத்துக்கு என்னிடம் விடையில்லை. ஆனால் ஞாயிறு பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வரும் கவிதைகள் ஆயாசத்தை ஏற்படுத்துகின்றன என்பதைச் சொல்லியாக வேண்டும். முகநூலால் நூற்றுக்கணக்கான கவிஞர்கள் வாசகர் பரப்பில் உலாவருகிறார்கள். பண்டிதமணியின் பாஷையில் சொல்வதானால் 'ஸர்ப்ப, ஸர்ப்ப' என்ற வேகத்தில் படைப்புத் தொழில் நடைபெறுகிறது. இந்தப் பெருக்கத்திலும் "நாலிலே ஒன்றிரண்டு பலித்திடலாம்" என்று ஆறுதலடைகிறேன்.

பெருமாளை முன்னிட்டு இந்த நீண்ட பீடிகை எழுத நேர்ந்தது. அவர் ஆற அமர எழுதியிருக்கிறார். எதையாவது எழுத வேண்டும் என்ற பரபரப்பு, அவசரம் இன்றி, தாம் கண்ட, கேட்ட, உணர்ந்தவற்றுக்கு கலை வடிவம் தந்திருக்கிறார்.

இன்னொன்றையும் சொல்லியாக வேண்டும்.

புதுக்கவிதையின் வருகையோடு கவிதைக்கு யாப்பு தேவையில்லை என்றாகிவிட்டது. சில காலத்துக்கு முன்பு கவிதையை முற்காலத்தில் போல நாம் வாய்விட்டுப் படிப்பதில்லை., மௌனமாக வாசிக்கிறோம்.

எனவே, 'கவிதை இன்று கட்புலமாகிவிட்டது' என்றொரு கருத்தை, பேராசிரியர் கா.சிவத்தம்பி முன்வைத்தவர்.

இது தவறான கருத்து. நல்ல கவிதையை மௌனமாக வாசிக்கும் போதே அதன் ஓசை நம் மனச்செவியில் விழுந்து கொண்டிருக்கும். ஆம், கவிதை ஓசையோடு பிரிப்பறியாத் தொடர்புடையது. இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே ஒரு லயத்துக்குட்பட்டு இயங்குகிறது. இதையே,

*"பூதங்கள் ஒத்துப் புதுமைதரல் விந்தையெனில்*
*நாதங்கள் சேரும் நயத்தினுக்கு நேராமோ?*
*ஆசை தரும் கோடி அதிசயங்கள் கண்டதிலே*
*ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ?"*

எனப் பாரதி வியந்து பாடினான்.

கவிஞர் பெருமாளின் கவிதைகளூடு இந்த ஓசை லயம் இழையோடுவது காண்கிறேன்.

*"கோதை குலமகளைக்*
*குடிலுக்குள் அடைத்துவிட்டு*
*சீதை சிறப்பியல்பைச்*
*செப்பித் திரிபவர்கள்-" என்றும்*

*"குண்டுச் சத்தம் கேட்குதோ!*
*குலை நடுங்க வைக்குதோ!*
*அந்தரித்துப் போன பிள்ளை*
*ஆரைத் தேடி அழுகுதோ! "* என்றும்

வரும் கவிதைகளை உதாரணங் காட்டலாம்.

பெருமாளின் வேர்கள் மலையகத்தில் ஆழப் பாய்ந்துள்ளன. தேயிலைத் தோட்டத்தில் உழைக்கும் தமிழ்த் தொழிலாளர்கள் மலையகத்தில் வாழும் சிங்கள மக்களோடு நல்லுறவு பேணுவதை "மலையகத்தில் ஒரு மாலைப் பொழுதில்" என்ற கவிதை சித்திரிக்கிறது. அவ்வப்போது இனக் கலவரங்கள் மூண்டது உண்மைதான். எந்தவிதக் காரணமுமின்றித் தாக்கப்படவும் வாழிடங்களை இழக்க நேர்ந்ததும்

உண்மைதான். இவை எல்லாவற்றையும் தாண்டி ஒரு சிங்களவனுக்கும் ஒரு தமிழனுக்கும் இறுக்கமான நட்பு நிலவுவதை இக்கவிதை காட்டுகிறது. ஓடிக் கொண்டிருக்கும் பேருந்திலிருந்து விழும் குழந்தையை ஏந்திக் காப்பாற்றுகிறார்கள் இந்த நண்பர்கள். அவர்கள் காப்பாற்றியது இலங்கை என்ற குழந்தை என்று முடித்திருக்கிறார் கவிஞர்.

பெருமாள் உழைப்போருக்கு - குறிப்பாக இளைஞர்களுக்கு - அழைப்பு விடுக்கிறார்.

*"விண்ணைக் குடையும் அறிஞர்களே - இந்த*

*மண்ணைக் குடைவோம் வாருங்கள்*

*திண்ணை தூங்கும் இளைஞர்களே - பயிர்*

*பண்ணை அமைக்க முயலுங்கள்!"*

பூமித்தாயின் மடிக்குள்ளே புதையல் போலக் கிடக்கும் வளங்களை வாரியள்ளி வறுமையில் வாடும் மக்கள் வாழ்வில் ஒளியேற்றும்படி அறைகூவல் விடுக்கிறார்.

கல்வி நிலையங்களை மிகக் கடுமையாக விமர்சிக்கிறார் கவிஞர். பெண்பிள்ளையைப் பெற்ற ஒருவன் கோணத்திலிருந்து துஷ்பிரயோகத்தை நோக்குகிறார். ஒரு காலத்தில் கோயில்களாக விளங்கிய கல்லூரிகள் இன்று காமுகர்கள் - கயவர்களின் கூடாரங்களாகியுள்ள இழிநிலையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார் பெருமாள். இப்படிப் பொதுமைப்படுத்துவது நியாயமல்லவாயினும், நாட்டிலும் உலகிலும் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்து வந்துள்ளதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

"யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை யாருக்குச் சொந்தம்?" என்ற கவிதை இந்தத் தொகுதிக்கு மகுடமாகத் திகழ்கிறது. இடப்பெயர்ச்சியாலோ, ஏழ்மையாலோ, குண்டு வீச்சில் பெற்றோரை இழந்ததாலோ அநாதரவாக அலையும் ஒரு குழந்தையைப் பற்றியது இத் தலைப்புக் கவிதை. போரில் யாருமே வெற்றி பெறுவதில்லை. எல்லோருமே தோற்றுப் போகிறோம் என்ற நிதர்சனம் காலங்கடந்தே எமக்கு உறைக்கிறது.

'பக்தர்கள் எல்லோரும் கவிஞர்களாவதில்லை; ஆனால் கவிஞர்கள்

பக்தர்களாகவே இருந்திருக்கிறார்கள்!' எனப் புதுமைப்பித்தன் கூறியதாக நினைவு. கவிஞர் பெருமாள் கிருஷ்ணன் மீது ஓர் இசைப்பாடல் புனைந்திருக்கிறார்.

*'பாண்டவர்க்காக அன்று*
*தூது சென்றாய்*
*பார்த்தனுக்காய்ப் போரில்*
*தேர் விடுத்தாய்*
*வேண்டாத நாளில்லை*
*வேணு கோபால் - எங்கள்*
*வேதனை தீரவழி*
*காண்கிலையோ!'*

ஆக, பன்முக ஆளுமையுள்ள கவிஞராக பெருமாளை இத்தொகுதி நிலைநிறுத்துகிறது., பாராட்டுகிறேன்.

*– கவிஞர் சோ.பத்மநாதன்–*

*'ஏரகம்'*
*பொற்பதி வீதி*
*கொக்குவில்*

## ஆசிரியர் உரை

யாருக்காக அல்லது யாருக்கு நமது படைப்பு சென்றடைய வேண்டும் என்று எழுதுகின்றோமோ அந்த ஒருவரால் அது புரிந்துகொள்ளப்பட வேண்டும். இல்லையெனில் நமது நோக்கம் நிறைவேறாது. அது வீண் விரயமாகவே இருந்துவிடும். இதுதான் எனது எழுத்துக்கள் பற்றிய எனது சிந்தனையாகும். இதை எல்லோருமே ஏற்றுக்கொண்டாக வேண்டும் என்பதில்லை. எழுதுகிறவர் ஒவ்வொருவருக்கும் அவரவர் கொள்கை, கோட்பாடுகள் மற்றும் கைவந்த நடையின்பாற்பட்ட விடயம் இது.

சுதந்திர வேட்கையுடன் எழுதத் தொடங்கிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தம் நாட்டு மக்களை எழுச்சிகொள்ள செய்யும் பொருட்டு பாமரமக்கள் மத்தியில் பழகிவந்த கிராமிய மெட்டுகளை பெரிதும் பயன்படுத்திக் கொண்டுள்ளார். புகழ் பெற்ற 'செந்தமிழ் நாடெனும் போதினிலே..' என்ற பாடலும்கூட கிராமிய மக்கள் மத்தியில் நிலவும் 'கும்மி'பாடல் மெட்டில் அமைந்திருப்பதாகவே கருதப்படுகின்றது. அந்தவகையில் குடுகுடுப்பைக்காரன் மெட்டையும் கூட அவர் விட்டுவைக்கவில்லை. அவ்வாறு அமைந்ததே "நல்ல காலம் வருகுது" என்ற பாடல்.

நண்பர் ஒருவர் இக்கால கவிதைகள் பற்றி குறிப்பிடும்போது கதவுகள், யன்னல்கள் ஏன் சாவித்துவாரத்தைக் கூட இறுக மூடிவிட்டு உள்ளே இருப்பதை பார்த்துக் கொள்ளுங்கள் என்று கேட்பதுபோல் இவர்கள் எழுதுகிறார்கள் என்று சாடியிருந்தார். வாசிப்பவனுக்கு எடுத்த எடுப்பில் விளங்காவிட்டால் அவன் அதைத் தூக்கிப் போட்டுவிடுவான் - விளங்காததை வாசிக்க வேண்டும் என்பது அவன் தலையெழுத்தா, என்ன?

புதிய முறையிலான மெட்டுகள், புதிய பாணிகள், புதிய நடைகள் வரவேற்கப்பட வேண்டியவை. ஆனால் புரியாத மொழிநடையினால் பயன் ஏற்படப் போவதில்லை என்பதே எனது கருத்து. குறியீடாக எழுதுவது வேறு. அது கவிஞனின் ஆளுமை அல்லது தனிப்பட்ட திறமையைப் பொறுத்தது. ஒன்றைச் சொல்லி இன்னொன்றை ஊகித்தறியச் செய்வது. இதற்கு ஓர் உதாரணத்தை சுட்டிக்காட்டலாம். இளம் கவிஞர் ஒருவரின் புதுக்கவிதைவரிகள் இவை.

*எங்களூரில்*

*கூப்பன் புள்ளி*

*வெட்டியவர்*

*இன்று ஊரில்*

*அவர் பெரியபுள்ளி'*

இந்த வரிகளை வாசிப்பவர் அதில் கவிதை இருக்கிறதோ இல்லையோ கருத்தொன்று ஆழமாக பொதிந்து கிடப்பதைப் பார்க்கலாம். இம்மாதிரியான நடை அல்லது புதுக் கவிதைகளை நான் பெரிதும் இரசிப்பதுண்டு.

நடந்தபடி தேடுவோம் என்ற தலைப்பில் யான் எழுதி வெளியிட்டிருந்த கவிதைத் தொகுப்பு, நண்பர்கள் அறிஞர்கள் மற்றும் வாசகர் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தமை எனது இந்தத் தொகுப்பை வெளியிட ஊக்கமளிப்பதாய் இருந்துள்ளது.

இத் தொகுப்பினை ஐந்து இயல்களாகப் பிரித்து அமைத்துள்ளேன். பொது இயல் என்ற பிரிவில் கல்வி நிலையங்களில் அவ்வப்போது நடைபெறும் சம்பவங்கள் தொடர்பான எனது கவிதையானது சில கடுமையான சொற் பிரயோகங்களைக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. என்றாலும் அவை தவிர்க்க முடியாதவையாகும். தனிப்பட்ட முறையில் எவரையும் குறிப்பிடும் நோக்கம் எனக்கு கிடையாது. நாடு முழுவதும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதன் காரணமாகவே இக்கவிதையை யான் எழுத நேர்ந்தது. கவிதையின் நோக்கம் உணரப்படவேண்டும். பாதிக்கப்பட்ட இளம் சிறார்கள், பெற்றோரின் நிலையில் இருந்து இது பார்க்கப்படவேண்டும்.

எனது முன்னைய தொகுப்பில் கண்ணன் பற்றிய ஒரு பாடல் இடம்பெற்றுள்ளது. இத் தொகுப்பில் மூன்று கவிதைகள் இடம்பெற்றுள்ளன. தமிழ் அன்னையை குறித்து நான் பாடும்போதெல்லாம் கண்ணனின் நினைவு வந்துவிடுகிறது. கிருஷ்ணனை வணங்குவதென்பது எமது மூதாதையர் வழிவந்த குலதெய்வ வழிபாடாகும். எனக்கு பெயரிட்ட போதும்கூட திருவுளச்சீட்டின் மூலம் பெருமாள் என்ற பெயர் கிடைத்ததாக என் தந்தையார் கூறக் கேட்டுள்ளேன். என் வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் இந்த தெய்வத்தின் அருளாசி இருந்துள்ளதை அறிந்து ஆச்சரியப்பட்டுள்ளேன். குலதெய்வ வழிபாடு என்பது எமது தாய்,

தந்தையரை ஏற்றுக்கொள்வது போன்றதாகும். அவர்களுக்கு ஈடாக வேறு எவரையும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதல்லவா! தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களுக்கு இது சிரிப்பை ஏற்படுத்துவதாக இருக்கலாம்.

"யாருக்கு சொந்தம் இந்தக் குழந்தை?" என்ற எனது ஒரு கவிதை கண்ணன் பற்றியதாகவுள்ளது. அதனை எழுதியதன் பின்னரே போர்க் காலத்தில் கைவிடப்பட்ட சிறுவன் பற்றிய கவிதை அதே தலைப்பில் எழுதப்பட்டது. ஒன்று தெய்வக் குழந்தை மற்றது மனிதக் குழந்தை. ஒன்று நம்மைக் காக்கவல்லது மற்றது நம்மால் காப்பாற்றப்படவேண்டியது.

நாடறிந்த கவிஞரும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஓய்வுநிலை அதிபருமான சோ.பத்மநாதன் (சோ.ப.) அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார். கை நிறைய பணிகள் இருந்தபோதிலும் நான் கேட்டுக்கொண்டதையடுத்து இதற்கென நேரம் ஒதுக்கி சிரமம் பாராட்டாது எழுதித்தந்துதவிய அவருக்கு எனது மனமுவந்த நன்றிகள் உரித்தாகுக. நூல் வெளியீட்டினை நடத்துவதற்கு எனக்குள்ள சிரமங்கள் பற்றி யாழ்.ஊடக அமையத்தின் செயலாளர் செல்வம் அவர்களுடனான உரையாடல் ஒன்றின்போது குறிப்பிட நேர்ந்தது. நான் கேட்காமலே அதனை நடத்தித் தருவதற்கு முன்வந்த அவருக்கும் யாழ்.ஊடக அமையத்தின் அன்பர்களுக்கும் என் நன்றிகள்.

இந்நூல் சிறப்புற வெளிவர கணனிப்படுத்தல் உட்பட பல்வேறு வகையிலும் சிரமம்பாராது உதவி புரிந்த மறுயுகம் வெளியீட்டகத்துக்கும் எனது நன்றிகள் உரித்தாகும். நூலினை அழகுற பதிப்பித்து வழங்கிய ஜெயஸ்ரீ பிரின்டேர்ஸ் அச்சகத்துக்கும் எனது நன்றிகள்.

குறிப்பாக, எனது இந்தக் கவிதைத் தொகுப்பினை அச்சிட்டு வெளியிடுவதற்கு நல்லூர் பிரதேச செயலரும், பிரதேச கலாசாரப் பகுதியினரும் எனது விண்ணப்பத்தினை ஏற்று 2017ம் ஆண்டுக்கான வருமானம் குறைந்த எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கான 20 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையினை வழங்கி உதவியமைக்காக அவர்களுக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி - வணக்கம்

*எஸ்.பெருமாள்*

*13A/3, புருடி ஒழுங்கை, அரியாலை,*
**021 222 3600/ 0717649694**

# தேசவியல்

## புதுமை பொங்கும் காலம் மலர்கவே!

வாழ்க எங்கள் தாய் மொழி
வாழ்க எங்கள் தாய் நிலம்
வாழ்க மாந்தர் யாவரும்
வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே!

புதுமையான சிந்தனை
புதுமையான இலக்கியம்
புதுமையான தொழில்முறை
புதுமை பொங்கும் காலம் மலர்கவே!

தொழில் முறையில் சமத்துவம்
தொழில் பகிர்வில் சமத்துவம்
தொழிலுக் கேற்ற ஊதியம்
தொழிற்றுறையில் புரட்சி காணுவோம்

இளையமாந்தர் யாவரும்
இணைந்து ஒன்றாய்ச் செயல்படும்
அருமையான பொறிமுறை
அமைத்து இளைஞர் எழுச்சி காணுவோம்!

*மக்கள் வாழ்வு ஒன்றையே*
*மனதில் கொண்டு செயல்படும்*
*மக்கள் தலைவர் தோன்றவே*
*மார்க்க மொன்றைக் கண்டு மகிழுவோம்!*

*வீரம் வேண்டும் வேண்டுவோம்*
*வீரம் தன்னைப் பேணுவோம்*
*வீரம் தன்னை விரயமின்றி*
*வேண்டும்போது செயலில் காட்டுவோம்!*

*நீதி வேண்டும் தேடுவோம்*
*நீதியார்க்கும் செய்குவோம்*
*நீதி தன்னை நிலை நிறுத்த*
*நீதியான முறையில் நகருவோம்!*

*தொழில் பயின்ற மாந்தரைத்*
*தொழில் முறைகள் யாவிலும்*
*தொகுத்துத் தொழில்கள் மேலுற*
*துடிப்பு கொண்டு நாட்டை உயர்த்துவோம்!*

*பெண்ணுரிமை பேணுவோம்*
*பெண் தலைமை போற்றுவோம்*
*பெண்களுக்குரியதைப்*
*பெற்றுக்கொள்ள தடைகள் நீக்குவோம்!*

*கல்வி தன்னை யாவர்க்கும்*
*பகிர்வதான வழிமுறை*
*இலகுவாக மாற்றுவோம்*
*ஏற்றத்தாழ்வு இதிலும் நீக்குவோம்!*

## சாபம் தானோ?

சலசலத்து ஓடிவரும்
ஆற்று நீரை
தக்கவைத்து சளைக்காமல்
வாய்க்கால் வெட்டி
மேட்டுநிலம் முழுமைக்குமே
தண்ணீர் பாய்ச்சி
பண்படுத்தி பாத்திகள் போட்டு
வீரியமாய் விதைகள் தூவி
விளைச்சலுக்காய்க்
காத்திருந்தோம்!
வீணாய்ப் போன சாத்தான்கள்
உட்புகுந்து
சகலதையும் அழித்துவிட்டார்
தரணியிலே நாங்கள் இன்று
தறிகெட்டு நிற்கின்றோம்
சாபம் தானோ!

# மலையகத்தில்
# ஒரு மாலைப் பொழுதில்.....!

ஒரு மாலைப் பொழுது மலையகத்தில்
சுகதே எனும் என் பால்ய நண்பன்
காரசாரமாக யாருடனோ தர்க்கத்தில்
ஈடுபட்டிருப்பதைக் கண்டேன்
பாதை ஓரத்தில் அவன் வருகைக்காகக்
காத்திருந்தேன்
என்னைக் கண்டதும் நிறுத்திவிட்டு வேகமாக
என்னிடம் வந்தான்

மோதல் யாருடன்?" நான்தான் கேட்டேன்
"ஒரு தமிழனுடன், அவன் கெட்டவன்" என்றான்
"நானும்தான் தமிழன், மறந்துவிட்டாயா?"
"ஓ... நீ நல்ல தமிழன், நாம் பால்ய நண்பர்கள்"
களங்கமற்ற சிறுவர்காலத்து நினைவுகள்
இன்றைய இனக்குரோத சூழ்நிலைகள்,
அனைத்தும் இருவர் மனங்களிலும்
ஒருகணம் பளிச்சிட்டு மறைந்தன
ஒருவரை ஒருவர் விறைத்து சிறிது
நேரம் பார்த்துக்கொண்டு நின்றோம்
பிறகு கட்டித் தழுவிக் கொண்டு
சிரித்தோம் வாய்விட்டு
இனவுணர்வும் வெறுப்பும் எங்கோ
ஓடி மறைந்துவிட்டன

*பேருந்து ஒன்று வேகமாக*
*எங்களைக் கடந்து சென்றது*
*அதன் பின் சாளரம் வழியாக*
*குழந்தையொன்று வீறிட்டபடி*
*எகிறிப்பாய்ந்தது*

*மின்னலாகப் பாய்ந்து*
*ஒரேசமயம் இருவரும்*
*கைகளை நீட்டி*
*குழந்தையை ஏந்திப்*
*பிடித்து காப்பாற்றினோம்*

*பேருந்து நின்றது "ஐயோ*
*என் குழந்தை" என்றபடி*
*தாய் ஒருவர் ஓடிவந்து*
*குழந்தையைப் பெற்றுக்கொண்டு*
*மீண்டு சென்றாள்*

*நண்பர்கள் இருவரும்*
*வாய்பிளந்து நின்றோம்*

*இலங்கையாம் குழந்தையை*
*ஏந்திப் பிடித்துக்*
*காப்பாற்றியது போன்ற*
*உணர்வு எங்களுக்கு*
*மெய்சிலிர்க்கச் செய்தது*

# புனிதக் கோயில்களாகட்டும் கல்வி நிலையங்கள் மீண்டும்

நம்பித்தான் எம் மகளை
உயர்கல்வி படிக்க வென
தம்பிரான் பேராலே தரம்
உயர்ந்த பள்ளிக்கு
எம்பிரானை இறைஞ்சியபின்
இங்கிதமா யனுப்பி வைத்தோம்

அங்கவளும் ஆசையுடன்
அழகாகப் படித்துவந்தாள்
சங்கடங்க ளெதுவும்
தலைதூக்க வில்லை ஆனால்
காலஞ்செல்ல மகளின்
மனப்போக்கி லேதோ மாற்றம்
வெளிப்படவே கலக்க முற்றோம்

உணவில் விருப்பமில்லை
உறவுகளில் நாட்டமில்லை
நித்திரையும் கொள்வதில்லை
நீள் நேரம் யோசிக்கிறாள்
ஏனென்று கேட்டாலும்
எதுவுமே சொல்வதில்லை

பலவாறும் யோசித்தபின்னர்
மருத்துவரை நாடிச் சென்றோம்
ஒன்றுமில்லை உள்ளத்தில்
ஏதோ வொரு தாக்கம்
கவுன்செலிங் செய்து பாருங்கள் என்றார்

அதனையும் செய்து பார்த்தோம்
அப்போதுதான் மறைந்து கிடந்த
பல விடயங்கள் தெரிய வரலாயிற்று

காடையர்களும் கயவர்களும்
காமாந்த வெறியர்களும்
அதிபர்களாகவும் அதிகம் படித்த
மேதாவிகளாகவும் ஆசாட பூதிகள்
அநேகர் பள்ளிகள், பாடசாலைகள்
கல்லூரிகளில் அமர்ந்திருப்பது
அம்பலமாயிற்று

நல்லவர்களும் நலம் விரும்பும்
பண்புள்ளம் கொண்டவர்களும்
இல்லாம லில்லை இருந்தாலும்
இவர்கள் எல்லாம்
பின்தள்ளப்பட்டு விடுகிறார்கள்

கையைப் பிடித்தானாம் ஒருத்தன்
மற்றொருத்தன் கன்னத்தில்
தடவியுள்ளான் இன்னொருத்தன்
காலினால் சுரண்டியுள்ளான்
பார்க்கும் போதெல்லாம் பல்லை
இளிப்பானாம் மேலும் ஒருத்தன்
பகிடிபோல் உரசுவானாம்
வேறொருத்தன் முத்தமிடவும்
முயன்றுள்ளான் ஒரு கயவன்
பித்தனாய் மாறி பிதற்றியுள்ளான்
பிறிதொருத்தன் இன்னுமிங்கு
எழுத்தில் வடிக்க வொண்ணாதவை
ஏராளம், ஏராளம்

எத்தர்க ளெல்லாம் பள்ளிகளில் இவ்வாறு
புத்தகம் எடுத்துப் போதிக்க வந்ததினால்
மெத்தவும்தான் கல்வி நிலை சீரழிந்து
போய்விட்டது நம் சிறார்களும் செய்வது
அறியாது திகைத்துப்போய்
நிற்கின்றார்கள்

ஒழுக்கமும் உயர் பண்புமுடைய
பெரியோர்கள் படிப்பித்த காலமது
மலையேறிவிட்டதென மாண்புடைய
பெரியோர்கள் பேசுவது
கேட்கின்றது.

மொத்தமிதில் முழுவதுமாய்
அக்கறையுள்ள அனைவருமே
எதிர்கால இளையோரின் நலன்கருதி
ஒருமித்து செயல்படுதல் அவசியமே

எம்மகள் போல் எத்தனை
இளையோர்கள் இவ்வாறு
நலிந்தனரோ, அறிவார் யாரோ?
நாள்தோறும் ஏடுகளில் நாம் காணும்
சேதிகளில் இவையன்றோ பெரும்பாலும்
மனம் நோகச் செய்கின்றன
சமூகமும், பெற்றோரும் பொறுப்புள்ள
அதிகாரிகளும் விழிப்படைய வேண்டாமா?

கல்வி நிலையங்கள் மீண்டும்
புனிதக் கோயில்களாக மாற வேண்டும்
அன்பும் அறனும் ஆசாரமும் மிகுந்த
புனிதமான சூழ்நிலைகள் அங்கு
மலர வேண்டும்.

# அவச் சொல்லை நீக்கிவிடுவோம்

விறகொடிக்கச் சென்றபோது காட்டில்
வேட்டையாட வந்தவன் யார்?
பழம் பொறுக்கச் சென்றபோது - தோப்பில்
பழம் கேட்டுவந்தவன் யார்
மலர் பறிக்கச் சென்றபோது - வனத்தில்
மாய்மாலம் செய்தவன் யார்?

சிறகொடிந்த பறவையாக இன்று
சிறுமைப்பட்டு நிற்கிறேன் யான்
வறுமை வந்து வாட்டுதே - வந்து
வாய்வார்த்தை கூறுவார் யாரோ!
இளமையோடு இருந்தபோது - பார்த்து
எவனெவனோ சிரித்ததுண்டு
களை இழந்து போனபின்னே - எவரும்
கண்வைத்தும் பார்ப்பதில்லை

பெண்ணாகப் பிறந்துவிட்டால்
பேய்கூடவிரங்குமென்பார்
இரங்கினார்கள் மயங்கினார்கள் நாம்
இளந்துடிப்போடிருந்த மட்டில்
அரவமின்றி ஒதுங்கிவிட்டார் அவை
அகன்றுவிட்டபோது மன்னோ!

அரசவையில் எமக்காக ஏதும்
அலசுதற்கு எவருமில்லை
புருசர்களை நம்பி நாங்கள்

*பொறுத்திருத்தல் மடமையாகும்*
*புறப்படுவீர் பெண் இனமே*
*புரட்சியொன்றை செய்திடலாம்*
*அரசவையில் மட்டுமன்றி - ஏனை*
*அனைத்து அவைகளிலும்*
*ஆசனங்கள் பிரித்திடுவோம்*
*அவைத் தலைவராகிடுவோம்*
*பெண்களுக்குரியதான*
*உரிமைகளை வென்றிடுவோம்*
*ஆண்களுக்கு அடிமையென்ற*
*அவச்சொல்லை நீக்கிடுவோம்*

## பொது இயல்

# யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை யாருக்குச் சொந்தம்?

வீதியின் ஓரத்தில் ஒரு மரத்தடியில்
அவன் நின்றிருந்தான் அநாதரவாக
கன்னங்கரிய மேனி - அணிந்திருந்த
காற்சட்டையும் வெறும் பீத்தல்

யாருக்குச் சொந்தம்
இந்தக் குழந்தை
யாருக்குச் சொந்தம்?

போர் முடிவுற்றிருந்த காலமது - மக்கள்
போக்கிடம் தேடி ஓடிக்கொண்டிருந்தநேரம்
எவ்வாறு இவ்விடம் அவன் வந்து சேர்ந்தான்
எப்போதுதான் சாப்பிட்டானோ, தெரியவில்லை

யாருக்குச் சொந்தம்
இந்தக் குழந்தை
யாருக்குச் சொந்தம்?

பெற்றோர் யார் என்றும் தெரியாது,
பெயரும் கூட இன்னதென்று தெரியாது
ஊர் எதுவென்றால் (பாவம்) புரியாது
பேச்சும்கூட சரியாகப்பேச வராது

*சிரிக்கின்றான் சில நேரம்*
*அழுகின்றான் சில நேரம்*
*சில்லிட்டு கத்துகிறான் சில நேரம்*
*சேற்றில் விழுந்தும் புரளுகிறான்*
*ஆற்றாமையால் அங்கேயே விழுந்து*
*படுத்துறங்கிப் போகிறான் சில நேரம்*

*யாருக்குச் சொந்தம்*
*இந்தக் குழந்தை*
*யாருக்குச் சொந்தம்?*

*குலை நடுங்கும் குண்டுவீச்சில் தன்*
*பெற்றோர் துடித்து மாண்டதை இந்தப்*
*பச்சிளம் பாலகன் பார்த்து மிரண்டிருப்பானோ?*
*அலையலையாக மக்கள் தப்பியோடியபோது*
*உறவினரால் கைவிடப்பட்டிருப்பானோ?*
*எத்தனை சோகம் அவன் பிஞ்சு முகத்தில்? அதை*
*எந்த சக்தியால் எடுத்தியம்பிட முடியும்?*

*யாருக்குச் சொந்தம்*
*இந்தக் குழந்தை*
*யாருக்குச் சொந்தம்?*

*சாப்பிட்டாயா என்று சைகை மூலம் கேட்டேன்*
*வயிற்றில் கைவைத்தான் கண்ணீர் வழிந்தோடியது*
*வருகிறாயா என்னுடன் வீட்டுக்குப் போகலாம் என்றேன்*
*வார்த்தையில்லை பின்னால் நடந்து வந்துவிட்டான்*

*யாருக்குச் சொந்தம்*
*இந்தக் குழந்தை*
*யாருக்குச் சொந்தம்?*

# மலர் ஒன்றை பறித்தேன்

மலர் ஒன்றைப் பறித்தேன் - அது
மனதைக் கவரும் மல்லிகைப் பூ

அளிகள் முதல் அனைவரையும்
சுண்டி இழுக்கும் மணம்
சுகத்தைத்தரும் குணம்
புனிதவெண் நிறம்
வெறுப்பை நீக்கும் திறம்

சரம் ஒன்றைத் தொடுத்தேன் - அதை
சாமிக்கென்று படைத்தேன்
சிரம் தாழ்த்தி நின்றேன் - மனச்
செருக் கொழிந்து போனேன்

கவிதையொன்றை வடித்தேன் - அதைக்
காற்றில் ஊதிச் சிதைத்தேன் - காற்று
சுழன்று வீசும்போது அந்தக்
கவிதை ஒலியைக் கேட்டேன்

கடவுள் செயலாமிஃது எனக்
கண் கலங்கி நின்றேன்

# மண்ணைக் குடைவோம் வாருங்கள்

விண்ணைக் குடையு மறிஞர்களே - இந்த
மண்ணைக் குடைவோம் வாருங்கள்
திண்ணை தூங்கு மிளைஞர்களே - பயிர்
பண்ணை அமைக்க முயலுங்கள்
தண்ணீ ரின்றித் தவிப்போர்க்கு
தாகம் தீர்க்கும் வழி என்ன?
உண்ண உணவும் போதாமல்
உலவும் மாந்தர் காணீரோ!
பூமித்தாயின் மடிக்குள்ளே
புதையல் போன்று இருக்கின்ற
வளங்கள் தம்மை முறையாக
வடித்து எடுக்க முயல்வீரேல்
எட்டுத்திக்கும் செழிப்புறுமே,
ஏன்தான் தயக்கம் இயம்பிடுவீர்!
பஞ்சம் பட்டினி ஒழிந்துவிடும்
பாரில் ஏழ்மை இருக்காதே!
ஏழ்மையில் மக்கள் வாடுகையில்
ஏவுகணைகள் எதற்காக?
கோடி கோடியாய்ப் பணத்தைக்
கொண்டு அதிலே கொட்டுகிறார்
வேறு உலகம் காண்பதற்கும்
விரைவாய் அங்கு போவதற்கும்
ஏன்தான் இத்தனை அவசரமோ
என்றோ வோர் நாள் எல்லோரும்
இணைந்து செல்லும் நிலை வரலாம்
அதுவரையிங்கு எல்லோரும்
அமைந்துவாழ வழிகாண்பீர்!

# அவர் நிகர்த்ததே தெய்வம்

வானத்து மேகத்தில் - ஒரு
மின் கீற்று வெளிப்பட்டது

வெளிப்பட்ட கீற்றினிலே ஒரு
மென்முகம் பளிச்சிட்டது

பளிச்சிட்ட முகத்தினிலே ஒரு
பரிதாபம் தென்பட்டது

தென்பட்ட பரிதாபம் எனை
திகைப்பினில் ஆழ்த்தியது

ஆழ்த்திய திகைப்பினிலே - செய்தல்
அறியாது விழித்து நின்றேன்

நின்றிட்ட என்னிடமே அவள்
விரைவதைக் கண்டுகொண்டேன்

(கண்டு) கொண்டதும் எழுந்துவிட்டேன் வெறும்
கனவென்றும் புரிந்துகொண்டேன்

கனவினை ஒத்ததுவே - இந்தக்
கலியுக வாழ்க்கை என்பர்

கலியுக வாழ்க்கையிலும் தம்
இணையற்ற பணிகளினால்

நிலைபெற்று வாழ்வாருண்டு - அவர்
நிகர்த்ததே தெய்வம் என்போம்

# பெண்ணை இழிவாகப் பேசாதே!

பெண்ணை இழிவாகப் பேசாதே
பெண்ணை பேதையென்று எண்ணியே ஏசாதே - நீ
பெண்ணே அன்னையும் ஆனாளே இதை
அறிந்திருந்தும்
கண்ணை மூடாதே! - நீ
இறைவனின் படைப்பினிலே
இரண்டுவகை உண்டு என்பார் - அதில்
ஒன்று ஆணாவான் மற்றது பெண்ணாகும்
இது எல்லா வுயிருக்குமே பொதுவாகும்
ஒன்றைத் தவிர்த்துவிடில் மற்றதில்லை
ஒன்றுக்கு மற்றது ஆதாரம் இதை
உணர்ந்துவிட்டா லில்லை சேதாரம்

ஆணுக்கென்றே சில
ஆண்மைக் குணமுண்டு - அவை
ஆண்டவனாலேயே
அளந்ததென்க
பெண்ணுக்கும் பெருமைதரும்
சிறப்புகளுண்டு அவை
பேணிடல் யாவர்க்கும்
கடமை என்போம்
ஆக்கும் சக்தி ஒருவரிடம் அதை
காக்கும் சக்தி மற்றவரிடம்
இரண்டும் சமமாகப் பேணப்படின் -
இங்கு
ஏற்றத்தாழ்வுக்கு இடமில்லையாம்

# அதிகாலையில்
# ஒலிக்கும் அந்த
# மாயக்குரல்

*விடியற்காலையில் அந்த*
*மாயக் குரல் கேட்கின்றது*
*மலை உச்சியிலிருந்து ஒருவன்*
*ஓசை நயத்தோடு பாடிக்கொண்டு*
*இறங்கி வருகின்றான்*

*கொச்சை மொழியில்*
*கிராமிய மெட்டில்*
*அவன் பாடுவதை*
*நான் கேட்ட அளவில்*
*என்மொழியில் இங்கு தருகின்றேன்*

*தினந்தோறும் அதிகாலை வேளையில் நான்*
*இந்த வழியாகப் போய்க்கொண்டிருக்கிறேன்.*
*அதேநேரம் அதே வீட்டு வாசலில் நீ நிற்கிறாய்*
*சிலநேரம் கிணற்றடியில் தண்ணீர்க் குடத்தை*
*இடுப்பில் வைத்தபடி தலை நிமிராமல்!*
*அடிமேல் அடிவைத்து நடக்கின்றாய்*
*நான் கடந்து சென்றதும் உன்தலை*
*நிமிர்வதை அறிவேன் நான்*
*உன்முகத்தில் பளிச்சிடும் புன்னகை*
*விடியற்காலையில் மின்னல்*
*வெட்டுவதுபோல் இருளை நீக்குகிறது*
*தண்ணீர்க்குடம் தளம்புவதுபோல்*

*ததும்பிநிற்கும் உன்இளமை என்னைக்*
*கவிபாடும்படி செய்கின்றது*

*ஏன் இவ்வாறு என்னை*
*வதைக்கிறாய் இளம் பெண்ணே?*

*மலையின் அடிவாரத்தை*
*அடையும்போது பாடும் குரல்*
*ஓய்ந்துபோய் விடுகிறது*

*அடுத்த தெருவில்*
*பால் ஊற்றுவதற்காக*
*பால்காரன்*
*எங்கள் வீட்டைக் கடந்து*
*செல்கின்றான்*

# "க" வரிசையில் சில கருத்துரைகள்

கத்தியைத் தீட்டினால் காய் வெட்டலாம்
புத்தியைத் தீட்டினால் புகழ் எட்டலாம்
நித்தியம் நேர்மையாய்ச் செயல் புரிந்தால்
சத்தியம் வாழ்வினில் மகிழ்வுறலாம் - நம்பு

காலையில் சூரியன் தோன்றி - உலகுக்கு
உயிர்ப்பைக் கொடுக்கும்
மாலையில் அது மறைந்து - உலகை
உறக்கத்தில் ஆழ்த்தும்
பிறப்பையும் இறப்பையும்
உணர்த்தும் தத்துவமாம் - இது

கிட்டினன் என்பானைக்
கிட்டிச் சென்றால்
எட்டிச் சென்ற எல்லாமே
கிட்டிவரும் என்பார்கள்
விட்டுவிலகி நிற்போர் - வினை

கீர்த்தி என்ப தோர் எட்டாத
பொருளல்ல
நேர்த்தியாய் செயல்புரிந்து
நேர்மையாய் வாழ்வாயேல் - உலகில்
பார்த்திபனாய்த் திகழ்வாய் - நீ

குணமென்பார் குலமென்பார் -
குவலயத்தில்

பணமென்னும் பவிசு வரின் -
இவையெல்லாம்
கணமேனும் தரிக்காது - காண்

கூட்டில் அடைபட்டு
கூக்குரலிடும் குருவி
சாப்பாட்டைக் கேட்டுத்
தவிப்பதாய் எண்ணாதே
பூட்டை அகற்றிவிடின்
புளகாங்கிதம் கொண்டு
வீட்டிற்கே சென்றுவிடும் - விடு

கெட்டித்தனமென்பது பெரியோர்க்குக்
கீழ்ப்படியா திருப்பதன்று - உலகில் பிறர்
எட்டி எட்டி பார்த்தும் எட்ட முடியாதவற்றை
எட்டிப்பிடித்து பட்டியலில் முட்டி
முன் நிற்பதாம் - முயல்

கேட்டாலும் சொல்லார்கள்
சொன்னாலும் கேளார்கள் - மேடையிலே
ஆட்டமெல்லா மாடி ஓய்ந்த பின்னர்
பாட்டாகப் பாடி நிற்பார் - பாவம்

கையிலிருக்கும் பொருள்
கைவிட்டுப் போனாலும் - மனப்
பையிலிருப்பவற்றை மறைப்பதற்கு
பொய்யிட்டுப் புலம்பாதே - போ

கொட்டைப் பாக்கினை
கொடுப்புக்குள் அடக்கிக்கொண்டு
பட்டைநாமம் படுதா பவிசுகளால்
பாசாங்கு செய்பவர்கள்
எட்டியும் பாரார்கள் - ஏகம்

*கோதை குலமகளைக்*
*குடிலுக்குள் அடைத்துவிட்டு*
*சீதை சிறப்பியல்பைச்*
*செப்பித் திரிபவர்கள்*
*பேதைப் பிறவிகளாம் - பேர்*

*கௌரவமே கதியென்று*
*காலமெல்லாம் வாழ்ந்தவர்கள்*
*சௌகரியம் சரிந்தபின்னர்*
*விதியென்று நோவார்கள் - வீண்*

# நீதி செத்துப்போகுமோ?

குண்டுச் சத்தம் கேட்குதோ!
குலை நடுங்க வைக்குதோ
அந்தரித்துப் போன பிள்ளை
ஆரைத் தேடி அழுகுதோ
கண் கலக்கம் ஏனம்மா
காலம் செய்த கோலமா
வண்ண மேனி வாடிப்போக
வந்ததென்ன சொல்லம்மா
இரத்தம் தோய்ந்த முகத்திலே
இருக்கும் சோகம் கொஞ்சமோ

கொலைக் களத்தில் எத்தனை
குஞ்சு மாய நேர்ந்ததோ?
அய்யோ என்ன கொடுமைகள்
அடுக்கடுக்காய் நேர்ந்ததோ?
பொய்கள் சொல்லி உலகினை
போக்கு காட்ட முடியுமோ
நீதி செத்துப் போகுமோ
நீசர் தப்பிக் கொள்வரோ?
ஆதியான தெய்வம் என்றும்
அமைதியாகத் தூங்குமோ?

# குடியின் மூலம் கிடைத்த வெகுமதி

ஒருவன்: பச்சை பச்சையாய்ப் பேசித் தொலைக்கிறான்
பகலிரவெல்லாம் நின்று கத்துறான்
கொச்சை கொச்சையாய்த் தமிழைக் கொல்லுறான்
கொடுமை, குரங்கைப் போல் துள்ளி குதிக்கிறான்
மொச்சைக் கொட்டையை முழுங்கியவன்போல
முழுசி முழுசியே பார்த்துப் பதுங்கிறான்

மற்றவன்: நண்பன் சொன்னானென்று குடிக்கப் பழகினேன்
உடல் உழைப்புக்கு நல்லது என்றதை நம்பினேன்
இரவு முழுவதும் நித்திரை போச்சுது
எழுந்து பார்த்தால் காலையும் ஆச்சுது
ஒரே ஒரு போத்தில்தான் நேற்றிரவு போட்டேன்
ஓசத்தியான சரக்குதான் இனிபோட மாட்டேன்

மனைவி மக்கள் எல்லாரும் பேசுறாங்கள்
மதிப்பைக் கெடுப்பதாகச் சொல்லுறாங்கள்
பக்கத்து வீட்டுக்காரன் பார்த்துச் சிரிக்கிறான்
பகிடியான பொருளைப்போல என்னை பார்க்கிறான்

கொஞ்சம் கொஞ்சமாகக்
கைப்பொருள் போச்சுது
குடியின் அளவும் நிதம்
கூடிப் போச்சுது
வேலைக்குப் போறதும்
குறையலாச்சுது
வீண் பெயர் கேட்டதே

*தினவரவாச்சுது*
*உடல் வலுவெல்லாம்*
*மிக மோசமாச்சுது*
*ஊனம் நோயெல்லாம்*
*உறவுகளாச்சுது*

*கண்கெட்ட பிறகுதான்*
*ஞானம் பிறக்குது*
*காலனும் அருகிலே*
*வந்து நிற்குது*

*குடிக்கிறதாலே கெடச்ச வெகுமதி*
*கோலம், அழகெல்லாம் போனதே விதி*
*படித்த படிப்பெல்லாம் பாழாப் போச்சுது*
*படுக்கை மட்டுமே சொந்தமாச்சுது.*

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
AR[illegible]APATHAM ROAD
KOKUVIL WEST

## சிறுவர் இயல்

# அலறுவதால் ஆக்கமில்லை

இரவுநேரம் குரல் எடுத்து
அலறுகின்றாயே - கூகையே
பகல் முழுதும் எங்குதான்
பதுங்கிவிட்டனையோ!

பகலில்தான் உனக்குப்
பார்வை இல்லையே - கூகையே
பகலே இரவாக
மாறிவிட்டதோ!

இரகசிய மிதில்
ஏதுமில்லையே - கூகையே
இறைவன் படைப்பிலே
இதுவுமொன்றுகாண்

எவ்வுயிர்க்குமே - இது
இட்டவிதியாகும் - கூகையே
ஏற்றுக்கொள்வது
நமது கடமையாம்

அலறுவதால் ஆக்கம்
இல்லைகாண் - கூகையே
அமைதியாக வாழ்ந்து
பழகுவாய்

## மண்புழுவின் மான்மியம்

மண்புழுவே உன்னைக் கண்டால்
எவருக்குமே வெறுப்பு வருகின்றது
பார்வைக்குநீ அசிங்கமாகக்
காணப்படுகின்றாய்
முகத்தைச் சுளிக்கிறார்கள்
அவர்கள்
நீயோ உடலை நெளிக்கின்றனை
மண்ணிலே புதைந்துபோகின்றாய்
மண்ணையே உண்டு மகிழ்கின்றாய்
உண்ட மண்ணை நீ எச்சமாய்
வெளிப்படுத்துகின்றாய்
அதன் மூலம் இந்தப் பூமியை
வளப்படுத்துகின்றாய்

பயனடைகிறார்கள் உழவர்கள்
செழிப்புறுகின்றன செடி கொடிகள்
அருவருப்பான புழுவாய் இருந்தும்
உன்னதமான உயிரினம் நீ

மனிதர்கள் உன்னைப்பார்த்து
படிப்பினை பெற வேண்டும்
பயனற்ற பிறப்பினால்
உலகுக்கு என்ன பயன்!
நீ வாழ்க, உன்னைப் படைத்த
இறைவன் புகழ் ஓங்குக!

# கரடி புதிர்

எழுகரடிகள் ஏறிச் சென்று
மலை யுச்சியை அடைந்தபோது
பத்தாவது கரடி அவைகளை
வரவேற்று சொன்னது:
"உங்களைத் தொடர்ந்து
மேலும் இரண்டு கரடிகள்
வந்து கொண்டிருக்கின்றன
என்னுடன் சேர்ந்துவந்த ஒன்று
மலையின் மறுபக்கம்
இறங்கிக்கொண்டிருக்கிறது
மற்றொன்று அடிவாரத்தை
அடைந்து வெகுநேரம்" என்று

அதேசமயம் உச்சியை
அடைந்த கரடி சொன்னது:
"பத்துப் பேருக்கு அளவான உணவுதான்
கொண்டுவந்திருக்கிறோம்
ஏனையவர்களுக்கு என்ன செய்வது?"
கடைசியாக ஏறிய கரடி சொன்னது,
"ஆளுக்குக் கொஞ்சம் மிச்சம் பிடித்தால்
நிலைமையை சமாளித்துவிடலாம்"
என்று

மொத்தம் எத்தனை கரடிகள்
பயணம் மேற்கொண்டிருந்தன!
எத்தனை பேருக்கு உணவு தேவைப்பட்டது?

# இணையில்லை அன்பர்காள்

பைந்தளிர் இலைகள் எல்லாம் என்
பருவத்தை நினைவூட்டும்
மென்தளிர் மலர்கள் எல்லாம் என்
மேனிக்கு மெருகூட்டும்
பச்சைநிறக் கிளிகள் எல்லாம் - என்
பேச்சுக்கு வலுவூட்டும்
குக்கூவெனும் குயில்களெல்லாம் - என்
குரலுக்குக் கனிவூட்டும்
கொக்கரக்கோவெனும் கோழிகளே - எனை
காலையில் துயில் எழுப்பும்

அக்கறையான அம்மாவோவெனில்
அணைத்து மகிழ்ந்திடுவாள்
காலைக்கடன்களை முடிக்கச் செய்து - அவள்
கனிவுடன் உணவளிப்பாள்
வேளைக்குப் பள்ளிக்குச் சென்றிடவே - நான்
உடைகளை மாற்றியதும்
புத்தகப் பையினைத் தோளில் மாட்டி -எனை
போய்வா என்றிடுவாள்

இலைகளின் பசுமையும்
மலர்களின் மென்மையும்
குயில்களின் குரல்களும்
கிளிகளின் பாசையும்
கோழியின் கூவலும்

*என் தாயின் அணைப்புக்கு*
*ஈடாகுமா?*
*அது தரும் உயிர்ப்புக்கு*
*இணையாக எதுவுமில்லை*

# அழுகையை நிறுத்து

*அழுகையை நிறுத்து தம்பி (தங்காய்)*
*அழுகை ஒருபோதும்*
*ஆக்கம் தராது*

*தோல்வியைக் கண்டு*
*துவளாதே தம்பி (தங்காய்)*
*தோல்விதான் வெற்றிக்கு*
*முதல்படியாகும்*

*அங்கிருந்து தொடங்கிடுவாய்*
*அடிமேல் அடிவைத்து*
*அசையாமல் நடைபோடு*
*உச்சியை அடையும்வரை*
*ஓய்ந்துவிடாதே - தம்பி (தங்காய்)*

*வெற்றிக்கனியை நீ*
*சுவைக்கும்போது*
*உலகம் உனைக்கண்டு வியக்கும்*
*உற்றாரும் பெற்றாரும் மகிழ்வர்*
*அதுவே முடிவல்ல..*

*அடுத்த ஆட்டத்துக்கு*
*ஆயத்தமாகு*
*இறைவனை நம்பி*
*இறங்கிடுவாய்*
*வெற்றி உனதே!*

# அனைத்தும் எங்கள் பறவைகள்

*வண்ண வண்ண பறவைகள் வாழ்த்துப் பாடும் பறவைகள்
எண்ணிறந்த நிறங்களில் எங்கும் வாழும் பறவைகள்
கூடிவாழும் பறவைகள் ஆடிப்பாடும் பறவைகள்
சோடி சேரும் பறவைகள் சோம்பலற்ற பறவைகள்
வேட்டையாடும் பறவைகள் விரைந்து பாயும் பறவைகள்
காட்டில்வாழும் பறவைகள் கவலையற்ற பறவைகள்
கூட்டில்வாழும் பறவைகள் குதூகலிக்கும் பறவைகள்
முட்டை போடும் பறவைகள் அடைபடுக்கும் பறவைகள்
இரவில்பாடும் பறவைகள் பகலில் தூங்கும் பறவைகள்
மீன்பிடிக்கும் பறவைகள் மிதந்துநிற்கும் பறவைகள்
கால்கடுக்க நீரிலே காத்துநிற்கும் பறவைகள்
தூரதேசப் பறவைகள் துணிச்சல்மிக்க பறவைகள்
பழங்கள் மற்றும் காய்களை பார்த்துத் தின்னும் பறவைகள்
பூச்சிபுழுயாவையும் புசித்துவாழும் பறவைகள்
துள்ளிப்பாயும் பறவைகள் துருதுருத்த பறவைகள்
கபடமான பறவைகள் களவெடுக்கும் பறவைகள்
பேசிப்பழகும் பறவைகள் பிரியமான பறவைகள்
ஆசியாவின் பறவைகள் அனைத்தும் எங்கள் பறவைகள்
வாழ்விடங்கள் மாறினும் வாழும் முறைகள் மாறினும்
பறந்துவாழும் முறையிலே மாற்றமில்லை ஆயினும்
பறக்கும் விதத்தில் மாத்திரம் மாற்றமுண்டு நண்பர்காள்!*

# தமிழ் இயல்

## பிதிபடியில் ஒன்றாக

அழகு தமிழ்ச் சொல்லெடுத்து
அணியணியாய்க் கோர்த்து - ஒரு
பழகு தமிழ்ப் பாட்டெழுதப்
பலவாறும் முயன்று பார்த்தேன்

பாட்டெதுவும் பிறக்கவில்லை
பாடுதற்குப்
பக்குவமும் போதவில்லை
ஆற்றல் தருமாறு அன்னையிடம்
அழுதழுது தொழுதுநின்றேன்

அரிவையரும் நகைத்தபடி
முயற்சிதான் உயர்ச்சிதரும்
மூத்தோரின் பயிற்சிதனைப்
பயின்றிடுக, காலஞ்செல்ல
கவிதையெனும் கலைமகளும்
கருத்தினிலே அமர்ந்திடுவாள்
கவலை வேண்டாம், என்றார்

இந்தமொழி கேட்டு யானும்
எழுந்து பார்த்தேன் கனவினிலே
அன்னையவள் இட்டபடி

ஆரம்பித்தேன், ஐயன்மீர்
இகழாதீர், அவள் பூணும்
அணிகலனில் ஒன்றாக அமையாது
இத்தொகுப்பதுவும், அறிவேன் யானும்
என்றாலும் தமிழ்த்தாயின் காலடியின்
மிதிபடியில் ஒன்றாக மிளிருமெனில்
அதுவேபோதும் ஆன்மா
அமைதிகொள்ளும்

## அன்னையை வணங்கினால்

செந்தமிழ்த்தாயை என்றும்
சிரமேற்கொண்டு எங்கள்
சிந்தையைத் தூய்மையாக்கி
செருக்கினை ஒதுக்கித்தள்ளி
பந்தங்களெதுவுமற்ற
பாங்குடன் நின்றோமானால்
அந்தமில் லறிவு ஆற்றல்
அனைத்துமே வந்துசேரும்
விந்தையில் விரைகுவீரே
விழித்துளம் திருந்துவீர்காள்
வந்தனை செய்து தாயை
வணங்குவம் வாரீர் வாரீர்
சந்ததி சேமம் கொள்ளும்
சழக்குகள் சரிந்து போகும்
நிந்தனை செய்தோரெல்லாம்
நீங்குவர் நேசம் கொள்வர்!

# உவகையோ உனக்குத் தாயே!

அன்னையே தமிழே உன்னை
ஆற்றலின் வடிவமாக
அறத்திற்குத் தெய்வமாக
நீதியை நிலை நிறுத்தும்
நீலி கபா லியாக
ஆதிமுதல் எம்மவர்க்கு
அரண்செயும் காளியாக
எண்ணி யான்
மகிழ்ந்திருந்தேன்
இருந்தபோதும்...

நாட்டிலும் உலகமெங்கும்
உந்தனின் உதிரமாந்தர்
உரிமைகளற்று வாழ்தல்
உவகையோ உனக்கு
இஃது பெருமையோ
தாயே சொல்க!

சொந்தமா யுள்ள மண்ணில்
அந்நியர் போல வாழ்ந்து
வெந்துயிர் வீழ்தல் கண்டும்
விழிப்படையாமை நன்றோ!

கடைக்கண் பார்வைபோதும்
கடைத்தேற வழி பிறக்கும்
புடைத்துவுன் சூலம் ஓங்கின்
பொடி பொடியாகும் பூமி

*நீதியை நிலை நிறுத்தி*
*நிம்மதி தோன்றச் செய்க*
*ஆதியே! அருந்தவத்து*
*சோதியே! அபலைகள்*
*கைவிடாதே!*

# இறை இயல்

## எங்குற்றனை இறைவா!

எங்குற்றனை இறைவா
எவரையான் நம்புவது?

பலபேரும் உன்பேரைச் சொல்லியே
ஏய்க்கிறார்கள் இவர்களை என்னால்
எதிர்க்கவும் முடியவில்லை அஃது
ஏனென்றும் புரியவில்லை

பொய்யைப் புனைசுருட்டை
மெய்யென்று செப்புகிறார்
ஐய, உன் பேராலே
அக்கிரமம் நடக்கின்றதே!

அரசியல் முதற்கொண்டு
ஆன்மீகம் வரை எவரும்
நேர்மையாய் செயல்படுதல்
இலையென்ற நிலை இங்கு
நிலைபெற்றுவிட்டதுவே
என்செய்வன்யான் இறைவா!

எங்குற்றனை?
அங்குற்று இவைகளையான்

*எடுத்தியம்ப ஏங்குகிறேன்*
*எங்குற்றனை இறைவா?*
*இருக்குமிடம்தன்னை*
*இயம்பிடவும் மாட்டாயோ?*

# போற்றிடுவாய் மனமே தினம் தினம் வணங்கி போற்றிடுவாய்

போற்றிடுவாய் மனமே
தினம் தினம் வணங்கி
போற்றிடுவாய் மனமே!

வேதங்கள் நான்கினையும்
கீதையிலே தரும்
நாதனாம் எங்கள்
போதகன் தாழ்தமை
தினம் தினம் வணங்கி
போற்றிடுவாய்....

உலகினை அளப்பதும் அவன்
அடியே - உலகோர்
படுந்துயர் துடைப்பதும் அவன்
அடியே

நாடிநிற்போர் தமை
தேடியே மனம் சிறிதும்
வாடிவிடாது வரம்
கோடிகோடியாய் அருளும்
கோமான் திருவடியை
தினம் தினம் வணங்கி
போற்றிடுவாய் மனமே

மாதவ முனிவரும்
மேதகு மனிதரும்
ஆதவனோடுயர்
சீதள மாதரும்

பேதமேதுமின்றி
நாத மேலுயர
காதலால் கனிந்து மனம்
ஆவலாய் தொழுதுநிற்கும்
மாதவன் அடிகளை
தினம் தினம் வணங்கி
போற்றிடுவாய் மனமே

ஆணவம் கொண்டொருவன்
பேதையாமோர் அணங்கின்
ஆடையைக் களைவதற்காய்
ஆயத்தம் செய்தவேளை
"அண்ணா"வென்றேயவளும்
அலறிய குரல் கேட்டுஅன்று
மின்னலாய் அவன்புரிந்த
மேதகும் செயல் அறிவாய்
ஆதலால் அவனடியை வணங்கி
போற்றிடுவாய் மனமே
அவலங்களகல்வதற்கு
அதுவொன்றேமார்க்கம்
ஆதலினால் தினம் தினம் வணங்கி
போற்றிடுவாய் மனமே....

# வேதனை தீர்வதற்கோர் வழிகாண்கிலையோ!

எடுப்பு: கிருஷ்ணா நீ என்
தெய்வ மல்லவோ!
கிருபைசெய் தாள்வதுன்
குணமல்ல வோ! கிருஷ்ணா .. ஓ கிருஷ்ணா

தொடுப்பு(1) பாலும் பழமும் தா
பருக வென்றாய்
பாவி என்நெஞ்சையே
பறித்துச் சென்றாய்
காலும் கையு மிங்கே
பதறுதையா!
காதலினால் மனம்
சிதறுதையா .... கிருஷ்ணா ஓ கிருஷ்ணா

தொடுப்பு (2) கருணாநிதியென்று
கை குவித்தேன்
காத்திடுவா யென்று
தினம் துதித்தேன்
சரணா கதியென்று
தலை சரித்தேன்
சகலமும் நீ என்று
மனம் விரித்தேன் .... கிருஷ்ணா ஓ கிருஷ்ணா

*தொடுப்பு (3)* *பாண்டவர்க்காய் அன்று*
*தூது சென்றாய்*
*பார்த்தனுக்காய்ப் போரில்*
*தேர் விடுத்தாய்*
*வேண்டாத நாளில்லை*
*வேணுகோபா(ல்) - எங்கள்*
*வேதனை தீர வழி*
*காண்கிலையோ!*

# யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை

*யாருக்குச் சொந்தம்*
*இந்தக் குழந்தை*
*யாருக்குச் சொந்தம்?*

*கன்னாங்கருத்த மேனி*
*கனிபோல காணுமிதழ்கள்*
*வெண்புறா நிகர்த்தப் பாதம்*
*வேதாந்திபோன்ற பார்வை*

*யாருக்குச் சொந்தம்*
*இந்தக் குழந்தை*
*யாருக்குச் சொந்தம்?*

*கண்ணன் என்பதிவன் பெயராம்*
*களிநடம் புரிந்திடுவானாம்*
*விண்ணன் எதிலும் விளையாட்டு*
*வெகுளிபோல் நடிப்பான் வெறும் பகட்டு*

*யாருக்குச் சொந்தம்*
*இந்தக் குழந்தை*
*யாருக்குச் சொந்தம்?*

*தாளம் தப்பாது நடன மாடுவான்*
*தடுத்தோமென்றால் வெகுண்டோடுவான்*
*மேளமொலிக்குமெனில் மிரளுவான்*
*மீண்டும் வந்தெம்முன் தோன்றுவான்*

*யாருக்குச் சொந்தம்*
*இந்தக் குழந்தை*
*யாருக்குச் சொந்தம்*

*ஏழைகளென்றால் மனமிரங்குவான்*
*கோழைகளென்றால் கோபம் கொள்ளுவான்*
*நம்பியபேர்களைக் கைவிடுவதில்லை - நய*
*வஞ்சகம் புரிவோரைத்தப்ப விடுவதுமில்லை*

*யாருக்குச் சொந்தம்*
*இந்தக் குழந்தை*
*யாருக்குச் சொந்தம்?*

# சும்மாவும் நகைக்காரோ?

*அன்பினாலாகாதது அகிலத்தில் ஏதுமில்லை*
*அன்பினைக் கொண்டே அகிலத்தை வென்றிடலாம்*
*என்றுரைத்த,*
*எம்மானை சிலைவடித்து*
*எதிர்பட்டவிடம் தோறும்*
*கம் மென்று அமர்ந்திருங்கள்*
*காவலுக்கென்பதுபோல்*
*பெம்மானைக் கொலுவைத்து*
*பெருங்கோயில் கட்டுகிறார்*
*அம்மானு மரவ மின்றி*
*அகமனதால் நோக்கியிதை*
*சும்மாவும் நகைக்காரோ*
*சுறுக்கென்று தைக்கும்படி*
*சம்மானம் போட்டுசளைக்காமல்*
*அமர்ந்திருக்கும் எங்கள்*
*பொம்மானைக் கேட்போம், இது!*

*பொம்மான்: பொன்மயமான பெருமான்*

# இறைவன் எப்போதும் இருப்பார்

இறைவன் என்றொருவர்
இருக்கிறார் என்பதற்கு
சான்றுதான் என்ன சாற்றுக
என்று கேட்டதற்கு:

உலகம் என்று ஒன்று
இருப்பதுவே இறைவன்
என்றொருவர் இருக்கிறார்
என்பதற்குச் சான்றுதான்
என்றார் ஞானி

உலகம் அழிந்துபோனால்
இறைவனும் இல்லாது
போவாரா என்ற கேள்விக்கு,
இறைவன் நினைத்தால் மாத்திரமே
உலகம் அழிந்துபோக முடியும்
அவருக்கு அழிவு என்பதே
கிடையாது என்றார் ஞானி

முழு பிரபஞ்சமுமே தானாகத்
தோன்றியதுதான் அதற்கு
மூலகர்த்தா வென்று எவரும்
கிடையாது ஆதியில் நிகழ்ந்த
பெரும்வெடிப்பை **(Bigbang)** இதற்கு
காரணமாகக் காட்டுகிறார்களே!

*மூலமில்லாமல் ஒரு*
*கோலமும் கிடையாது*
*இறைவன் என்கின்ற*
*மூலமின்றி எதுவுமே*
*தோன்றியிருக்க முடியாது*
*ஞானிக்டும் வாதம் செய்தார்*

*அந்த மூலத்தைக் கண்டுபிடிக்கவே*
*விஞ்ஞானிகள் முயன்று*
*கொண்டிருக்கிறார்கள்*

*அவர்கள் ஒரு முடிவுக்கு*
*வருமுன்பே ஒன்றில்*
*உலகம் அழிந்துபோயிருக்கும்*
*அன்றேல் விஞ்ஞானிகளே*
*உலகை அழித்துவிட்டிருப்பார்கள்*
*இது ஞானியின் முடிவு*

*அவ்வாறாயின் இறைவன்?*

*அவர் எப்போதுமே இருப்பார்*
*அவரால் படைக்கப்பட்டவர்கள்தான்*
*இந்த விஞ்ஞானிகள் என்போரும்*
*முற்றுப்புள்ளிவைத்தார் ஞானி*

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

**கலைஞானச்சுடர், கலாபூஷணம்**
**எஸ்.பெருமாள் பற்றிய சிறுகுறிப்பு**



மூத்த தமிழ் பத்திரிகையாளர்களில் திரு.எஸ்.பெருமாளை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். வீரகேசரி, ஈழநாடு, வலம்புரி, உதயன் என பல பத்திரிகைகளிலும் ஏறத்தாழ 55 ஆண்டுகள் பணிபுரிந்ததன் பின்னர் 2017 முற்பகுதியில் அவர் ஓய்வுபெற்றுள்ளார். இவரிடம் பயிற்சி பெற்ற பலர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஊடகத்துறைகளில் பணியாற்றிவருகிறார்கள். இலங்கையில் வெளிவருகின்ற பத்திரிகைகள் பலவற்றிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. பன்னீரன், பி.எஸ்.பி, பேனா, வர்ணம், ரம்யன் மற்றும் கோகுலன் என்ற பல்வேறு புனைபெயர்களில் இவர் எழுதிவந்துள்ளார். பத்திரிகைத்துறையின் தீவிர பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள இவர் தமது அனுபவங்களை எதிர்காலத்தில் இத்துறையில் ஈடுபடக்கூடியவர்களுக்கென நூல் ஒன்றினையும் **"நடந்தபடி தேடுவோம்"** என்ற கவிதைத் தொகுப்பொன்றினையும் வெளியிட்டுள்ளார். இப்பொழுது **"யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை யாருக்குச் சொந்தம்"** என்ற தலைப்பில் இந்தக் கவிதைத் தொகுப்பினை வெளியிடுகிறார்.

ஊடகத்துறையில் இவர் ஆற்றியுள்ள பணிகளைப் பாராட்டி நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையினர், பிரதேச செயலர் திருமதி அன்ரன் வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவின்போது 2017ஆம் ஆண்டு ஊடகத்துறைக்கான கலைஞானச்சுடர் எனும் விருதினை வழங்கி கௌரவித்தனர். அதேபோல், கலாசாரம் மற்றும் கலைஅலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முஸ்லிம் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து கொழும்பு, தாமரை தடாகம் (நெலும்பொக்குண) கலையரங்கில் நடத்திய 2017ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருது வழங்கும் பெருவிழாவில் ஊடகத்துறைக்கான கலாபூஷண விருதினை இவருக்கு வழங்கி கௌரவித்தன.

**யோசப் பாலா - உளச சமூக சீராளன்**

9 789557 286013